**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**M.C.OP.No.69/2022- RW-2**

| Name | திரு.ராமசாமி | District | இராணிப்பேட்டை |
| --- | --- | --- | --- |
| Father/Husband Name | திரு.ராஜகோபால் | Occupation | முதுநிலை தொழில்நுட்ப பணியாளர், அரசு போக்குவரத்து கழகம், ஆற்காடு |
| Village /Area | ஆற்காடு | Age | 58 |
| Taluk | ஆற்காடு | ID Card No. | 22779 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 16.09.2025.

**முதல் விசாரணை:-**

நான் இந்த மனுவில் 2-ம் மனுதாரரின் போக்குவரத்து கழகத்தின் ஆற்காடு பணிமனை பிரிவில் முதுநிலை தொழில் நுட்ப பணியாளராக வேலை செய்து வருகிறேன். நான் இன்று தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள் தான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் என் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டிக்கொள்கிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை:-**

நான் 36 வருடங்களாக 2-ம் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில் தொழில்நுட்ப பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய முதன்மை பணி பேருந்தை பராமரிப்பது என்றால் சரிதான். எங்கள் பணிமனையில் 90 பேருந்துகள் எங்கள் பராமரிப்பில் இருக்கும். பேருந்துகளின் டயர்களை தினமும் பரிசோதிப்போம். பேருந்துகளின் மற்ற பாகங்களை மாதம் ஒருமுறை பரிசோதிப்போம். பேருந்தின் முன்பக்க, பின்பக்க டயர்களின் காற்றழுத்தம் புதிய டயர்களாக இருந்தால் 120, பழைய டயர்கள் அல்லது மறுசீரமைப்பு செய்த டயர்களாக இருந்தால் 115 காற்றழுத்தம் வைப்போம். விபத்து நடந்த போது அந்த பேருந்தை ஓட்டிய ஓட்டுநரின் பெயர் தயாளன் ஆவார். அவருக்கும், எனக்கும் முன்விரோதம் இல்லை. பேருந்தின் பின்பக்க டயர் வெடித்ததால் விபத்து ஏற்பட்டதாக ஓட்டுநர் தெரிவித்தார். பேருந்தின் பின்பக்க டயர்களில் வலது

பக்கம் இருந்த உட்புற டயர் வெடித்துள்ளது. பொதுவாக எங்கள் நிர்வாகத்தில் உட்புற டயர் மறுசீரமைக்கப்பட்ட டயராகவும், வெளிப்புற டயர் நல்ல டயராகவும் பயன்படுத்துவோம் என்றால் சரியல்ல. எங்கள் நிர்வாகம் பேருந்தின் டயர்களை சரியான முறையில் பராமரிக்காததால் தான் அந்த டயர் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் வெளிப்புற டயரை மட்டும் பராமரித்துவிட்டு, உட்புற டயரை கவனக்குறைவாக பராமரிக்காமல் இருந்ததால் தான் அந்த டயர் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் மனுதாரருக்கு 2–ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.